## முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

## Elec.OP. No. 164/2022

2025 ம் ஆண்டு ஜுலை 28 ஆம் நாள் திங்கள்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வேம்பு Bench Clerk Gr.I அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | : | |
| த/பெ. | : | | வட்டம் | : | |
| வயது | : | | கிராமம் | : | |
| ஜாதி | : | | மதம் | : | |

ம.சா. 2

<u>முதல் விசாரணை</u> :–

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். நான் முசிறி அருகே உள்ள மேட்டுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கட்டிட ஒப்பந்ததாரராக வேலை செய்கிறேன். மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு பற்றி எனக்கு தெரியும். 11–ஆவது வார்டு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட சௌந்தரராஜனுடைய தேர்தல் செல்லாது என்று மனு தாக்கல் செய்துள்ளார். 05.02.2022–ஆம் தேதி வேட்பு மனு பரிசீலனையின்போது 2–ஆம் எதிர்மனுதாரர் சௌந்தரராஜன் மீது ஐந்து குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக நான் ஆட்சேபனை மனு கொடுத்திருந்தேன். அதை அவர் வாங்க மறுத்துவிட்டார்கள். அதனால், அன்றைய தினமே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனு தாக்கல் ../

செய்து 2–ஆம் எதிர்மனுதாரரின் வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த படிவம்–3 மற்றும் படிவம்–3 ஏ ஆகியவற்றை பெற்றேன். அதை நான் மனுதாரரிடம் கொடுத்து இந்த வழக்கில் அது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.